# சீர்காழி நகராட்சி

## சொத்து வரி திருத்தம் 2018

# அறிவிக்கை

அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 26.07.2018–ன் படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, அட்டவணை 4–ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் சீர்காழி நகராட்சி சொத்துவரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு சொத்துக்களின் உரிமையாளர்கள் / குடியிருப்போர் / குத்தகைதாரர்கள் சமர்பிக்கும் சொத்துவரி சுய மதிப்பீடு விபர அறிக்கையிலுள்ள விபரங்களை அடிப்படையாகக் கொண்டு இருக்கும். மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.237 நாள்.24.08.2018–ன் படி கீழ்கண்டுள்ளவாறு மண்டல அடிப்படை மதிப்பு (Zonal Value) 01.04.2018 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்பட்டு விபரங்கள் சீர்காழி நகராட்சி அறிவிப்பு பலகையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. விபரங்கள் அலுவலக நேரத்தில் நகராட்சி அலுவலகத்தில் நேரடியாகவும் மற்றும் மேற்படி இணையதளத்தின் (commr.sirkazhi@tn.gov.in) வாயிலாகவும் தெரிந்து கொள்ளலாம்.

| மண்டலம் | சதுர அடிக்கான மண்டல அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு | சீராய்வு செய்யப்பட்டுள்ள மதிப்பு |
| A | 100 பைசா | 150 |
| B | 75 பைசா | 115 |
| C | 60 பைசா | 90 |

மேலும், இதுகுறித்து ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சீர்காழி நகராட்சி ஆணையருக்கு அனுப்பலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

**இடம்: சீர்காழி**
**நாள்: 10.09.2018**

**ஆணையர் (பொ)**
சீர்காழி நகராட்சி

வெளியீட்டு ஆணை எண்: 127/செமதொஅ/2018/நாகப்பட்டினம் மாவட்டம்.
நாள்:12.09.2018